மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 08-ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 148/21

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: வரதராஜன் | தேதி : 08.06.26 |
| வயது : | த/பெ : கெங்காநாயக்கர் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>08.06.26 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 2 ம் வாதியின் கணவர் மற்றும் வாதிகள் தரப்பு 1 ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

2.08.07.1924 ம் தேதி பெருமாள் நாயக்கருக்கு அழகிரி நாயக்கர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆகும். 10.08.1942 ம் தேதி ராமசாமி நாயக்கருக்கு முத்தையா பண்டாரம் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும். 20.09.1945 ம் தேதி ஆழ்வார் அம்மாளுக்கு அய்யாக்குட்டி பண்டாரம் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆகும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 18:59:07 +0530

3.01.07.2009 ம் தேதி 4 ம் பிரதிவாதியின் மனைவி சரோஜா அம்மாளுக்கு நாராயணசாமி நாயக்கர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 4 ஆகும். 23.01.2014 ம் தேதி 3 ம் பிரதிவாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 5 ஆகும்.

4.15.10.2020 ம் தேதி 4 ம் பிரதிவாதிக்கு 3 ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 6 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.08 18:59:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.